# எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கை
# (TELL US POLICY)

### பதிப்பு ஒன்று, ஜனவரி 2024

### Primark-இன் உறுதி

Primark-இல், நாங்கள் நேர்மையான முறையில் வணிகம் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். நாங்கள் எப்பொழுதும் நேர்மையுடன் செயல்பட உறுதியாக உள்ளோம். பொறுப்புள்ள நடைமுறைகளுக்கு முன்னுரிமை அளித்து, வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை பாதுகாத்து மேம்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறோம்.

எங்கள் சப்ளை செயினில் உள்ள தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான மற்றும் மேம்பட்ட பணியிடங்களை வழங்க நாங்கள் உறுதியாக உள்ளோம். மேலும் எங்கள் சப்ளை செயினில் உள்ள தொழிலாளர்கள், சப்ளையர்கள் மற்றும் உற்பத்தி தளங்களைச் சார்ந்து வாழும் மக்களால், அவர்கள் அனுபவிக்கும் பொருத்தமற்ற, நேர்மையற்ற, சட்டவிரோதமான அல்லது ஆபத்தான சூழல்களை பற்றி எங்களிடம் தெரிவிக்க அதிகாரம் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பது, நாங்கள் ஒரு வலுவான நிறுவனமாக இருக்கிறோம் என்பதை வலியுறுத்துகிறது. நாங்கள், எங்கள் சப்ளை செயின் மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் பயனுள்ள மற்றும் நேர்மையான தகவல்தொடர்புகளை ஊக்குவிக்கிறோம். எங்களின், “எங்களுக்கு தெரிவியுங்கள்” கொள்கையானது (UNGPகள்) ஐ.நா வணிகம் மற்றும் மனித உரிமைகள் மீதான வழிகாட்டல் கொள்கைகளையும் நாம் அறிந்திருக்கும் பொருத்தமான ஒழுங்குமுறை தேவைகளையும் பின்பற்றுகிறது.

### நீங்கள் ஏன் எங்களுக்கு தெரிவிக்க வேண்டும்?

நீங்கள் நமது சப்ளை செயினில் ஒரு தொழிலாளி அல்லது சப்ளையராக இருந்தால், அல்லது Primark தயாரிப்புகள் உற்பத்தி செய்யப்படும் இடங்களுக்கு அருகில் வசிப்பவராக இருந்தால், முறையற்றது, நேர்மையற்றது, சட்டவிரோதமானது அல்லது அபாயகரமானது என்று நீங்கள் கருதும் எதையும் நீங்கள் கண்டறிந்தால், அது குறித்து பேசவும் உங்கள் பிரச்சனைகளைப் பகிர்ந்துகொள்வதற்கு நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். எங்களிடம் நம்பகமான மற்றும் அநாமதேய (சட்ட காரணங்களுக்காக நாங்கள் வெளிப்படுத்த வேண்டியது தவிர) "எங்களுக்கு தெரிவியுங்கள்", என்ற அமைப்பு உள்ளது , இது உங்களுக்கு இதைச் செய்ய உதவுகிறது. இது “எங்களுக்கு தெரிவியுங்கள்” கொள்கையின் கீழ் உள்ளது. பிரச்சினைகளைப் பற்றி பேசுவதன் மூலம், அவற்றை திறம்பட ஆராய்ந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க முடியும்.

எங்களுக்கு தெரிவியுங்கள் என்பது குறைதீர்ப்பு மற்றும் ஒழுங்கு வழிமுறைகள் போன்ற உங்கள் வழக்கமான பணியிடக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அல்லது உங்களுக்கு கிடைக்கக்கூடிய எந்தவொரு தொழிற்சங்க அல்லது பணியாளர் குழு செயல்முறைகளுக்கும் மாற்றாக இருக்காது என்பதை நினைவில் கொள்ளவும்.

## "எங்களுக்கு தெரிவியுங்கள்" யாருக்கு பொருந்தும்?

Primark இன் சப்ளை செயின் முழுவதிலும் உள்ள அனைத்துத் தொழிலாளர்கள் மற்றும் சப்ளையர்களையும், Primark தயாரிப்புகள் தயாரிக்கப்படும் தளங்களுக்கு அருகில் வசிக்கும் நபர்களையும், எங்களுக்கு தெரிவியுங்கள் அமைப்பின் மூலம் எங்களுடன் பேசுவதற்கும் அவர்களின் பிரச்சனைகளை தெரிவிக்கவும் ஊக்குவிக்கிறோம். முழுநேர, பகுதிநேர, நிலையான, சாதாரண அல்லது ஏஜென்சி பணியாளர், வீட்டில் இருந்தபடியே பணி செய்பவர், இரண்டாம் நிலை தொழிலாளர்கள், பயிற்சி பெறுபவர் அல்லது தன்னார்வலர்கள் உட்பட எந்த வகையான பணியாளரும் எங்களுக்கு தெரிவியுங்கள் என்பதைப் பயன்படுத்தலாம்.

எங்களின் கடைகள் உள்ள எந்த நாட்டிலும் Primark - க்காக நேரடியாகப் பணிபுரியும் சக ஊழியர்களும், Primark பங்குதாரர்கள், முகவர்கள், ஒப்பந்ததாரர்கள், வெளி ஆலோசகர்கள், மூன்றாம் தரப்பு பிரதிநிதிகள், வணிக பாட்னர்கள் மற்றும் ஸ்பான்சர்கள், Primark -இன் பேசுங்கள் (ஸ்பீக் அப்) இயக்கமுறையைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். நீங்கள் இங்கே மேலும் அறியலாம்: https://corporate.primark.com/en-gb/primark-cares/resources/social.

## நீங்கள் எங்களிடம் எதைப் பற்றி தெரிவிக்க வேண்டும்?

பொருத்தமற்ற, நேர்மையற்ற, சட்டவிரோதமான அல்லது ஆபத்தான நடத்தை நடைபெறுவதாக நீங்கள் நம்பினால், நாங்கள் உங்களுக்கு ஆதரவளிப்போம் என்ற நம்பிக்கையுடன் உங்கள் பிரச்சனைகளைப் பற்றி எங்களிடம் தெரிவிக்கலாம். பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றின் மூலம் நீங்கள் புகாரளிக்கலாம்:

- Primark-இன் சப்ளையர் நடத்தை விதிகளை மீறுதல், அவற்றில் பின்வருபவை அடங்கும்:
    - வலுக்கட்டாய அல்லது கட்டாய உழைப்பு அல்லது நவீன அடிமைத்தனத்தின் வேறு ஏதேனும் அறிகுறி;
    - சட்டப்பூர்வ ஊதியம் மற்றும் சலுகைகளை வழங்காதது;
    - தொழிற்சங்கங்கள் அல்லது கூட்டுப் பேரம் பேசுவதில் சேர்வதை அல்லது அமைப்பதைத் தடுத்தல்;
    - பாதுகாப்பற்ற அல்லது சுகாதாரமற்ற பணிச்சூழல்;
    - சட்டப்பூர்வமான வேலை நேரத்தை விட அதிகமான வேலை நேரம்;
    - பாரபட்சமாக நடத்துதல், கொடுமைப்படுத்துதல் அல்லது துன்புறுத்துதல்;

    - தவறான அல்லது வற்புறுத்தும் நடத்தை;
    - சுற்றுச்சூழல் பாதிப்பு; மற்றும்
    - லஞ்சம் மற்றும் ஊழல்.
- மனித உரிமைகள், நெறிமுறை பிரச்சினைகள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான வேறு எந்த Primark கொள்கைகளையும் மீறுதல்;
- அதிகாரபூர்வமற்ற ரகசிய தகவல் வெளியீடு அல்லது பிற தரவு மீறல்கள்;
- Primark ஆர்டர்களின் அங்கீகரிக்கப்படாத துணை ஒப்பந்தம்;
- மோசடி நிதி நடவடிக்கை; மற்றும்
- மேற்கூறியவற்றில் ஏதேனும் ஒன்றை வேண்டுமென்றே மறைத்தல்.

மேலே உள்ள பட்டியலில் சேர்க்கப்படாத பிரச்சனைகளை விருப்பம் 4 ஐப் (கீழே அமைக்கப்பட்டுள்ளது) பயன்படுத்தி எங்களுக்கு தெரிவியுங்கள் மூலம் புகாரளிக்க முடியும்.

எங்களுக்கு தெரிவியுங்கள் என்ற இந்தக் கொள்கையின் வரம்புக்குள் ஏதேனும் உள்ளதா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், அல்லது முறையான புகாரைச் செய்வதற்கு முன்னர் யாரிடமாவது ரகசியமாகப் பேச விரும்பினால், உங்கள் லைன் மேனேஜர் அல்லது சூப்பர்வைசர் அல்லது உங்கள் இடத்தில் அல்லது பணியிடத்தில் உள்ள உங்கள் தொழிற்சங்க அல்லது பணியாளர் குழுப் பிரதிநிதிகள் இருக்கும்பட்சத்தில் அவர்களிடம் பேசும் படி பரிந்துரைக்கிறோம்.

## நீங்கள் எப்படி பிரச்சினைகளை எழுப்பி எங்களிடம் தெரிவிப்பீர்கள்?

கவலைக்குரிய பிரச்சனைகள் பற்றி புகார் எழுப்ப பின்வரும் விருப்பங்களைப் பார்க்கவும். **நீங்கள் அல்லது வேறு யாராவது உடனடி ஆபத்தில் இருந்தால், உங்கள் உள்ளூர் அவசர சேவையைத் தொடர்பு கொள்ளவும்.**

### *விருப்பத்தேர்வு 1: உங்கள் லைன் மேனேஜர்/சூப்பர்வைசரிடம் தெரிவிக்கவும்*

உங்களது பிரச்சனைகளைப் பற்றி உங்கள் லைன் மேனேஜர் அல்லது சூப்பர்வைசரிடம் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தெரிவிக்குமாறு பரிந்துரைக்கிறோம். நீங்கள் கவனித்த உங்கள் லைன் மேனேஜர் அல்லது சூப்பர்வைசரின் நடத்தையின் காரணமாக அவர்களை தொடர்புகொள்ள நீங்கள் தயங்கினால், கீழே கொடுக்கப்பட்டுள்ள விருப்பங்களில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துமாறு உங்களை ஊக்குவிக்கிறோம்.

### *விருப்பத்தேர்வு 2: சாத்தியமான சமயங்களில், உங்கள் உள்ளூர் தொழிற்சங்கம் அல்லது தொழிலாளர் குழுப் பிரதிநிதியைத் தொடர்புகொள்ளவும்*

உங்கள் லைன் மேனேஜர் அல்லது சூப்பர்வைசரிடம் இந்த விஷயத்தைத் தெரிவிக்க இயலாது என்று நீங்கள் உணர்ந்தால், அல்லது உங்கள் லைன் மேனேஜர் அல்லது சூப்பர்வைசர் உங்கள் பிரச்சனைகளைப் பற்றி கண்டுக்கொள்ளவில்லை என்று நீங்கள் நினைத்தால், உங்கள் உள்ளூர் தொழிற்சங்க அல்லது பணியாளர் கமிட்டிப் பிரதிநிதி இருக்கும்பட்சத்தில் அந்தப் பிரச்சனை குறித்து அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லலாம்.

### *விருப்பத்தேர்வு 3: சாத்தியமான சமயங்களில் உங்கள் உள்ளூர் பணியாளர் உதவி எண்ணைத் தொடர்பு கொள்ளவும் (பின் இணைப்பு 1 ஐப் பார்க்கவும்)*

உங்கள் லைன் மேனேஜர், சூப்பர்வைசர், தொழிற்சங்கம் அல்லது தொழிலாளர் கமிட்டி பிரதிநிதியிடம் இந்தப் பிரச்சனையை உங்களால் தெரிவிக்க முடியவில்லை என்றால், அல்லது நீங்கள் ஏற்கனவே அவ்வாறு செய்திருந்து, உங்கள் பிரச்சனையை அவர்கள் கண்டுகொள்ளவில்லை என்று நீங்கள் உணர்ந்தால், பின் இணைப்பு 1 இல் அடையாளம் காணப்பட்டுள்ளபடி, உங்கள் உள்ளூர் பணியாளர் ஹெல்ப்லைனின் கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்லலாம்.

### *விருப்பத்தேர்வு 4: எங்களுக்கு தெரிவியுங்கள் லைன் (விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டும், Primark தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளின் அறிவிப்புப் பலகைகளிலும் வெளியிடப்படும்)*

விருப்பத்தேர்வுகள் 1, 2 மற்றும் 3 உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றால், அல்லது உங்கள் பிரச்சனை மற்ற விருப்பங்கள் மூலம் தீர்க்கப்படவில்லை எனில், கீழே உள்ள விவரங்களைப் பயன்படுத்தி, எங்களுக்குத் தெரிவிக்கவும் தொலைபேசி இணைப்பு, இணைய சேவை அல்லது ஸ்மார்ட்போன் செயலியைப் பயன்படுத்தவும். இவை அனைத்தும் இலவசம்.

| **தொலைபேசி** | **இணைய முகவரி** | **அணுகல் குறியீடு** | **QR குறியீடு** |
|---|---|---|---|
| ශ්‍රී ලංකා:<br>94720910370 | https://primark.speakup.report/tellus | 106502 | |

எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி எண்ணை அழைக்க நீங்கள் தேர்வுசெய்தால், 106502 என்ற Primark-க்கான அணுகல் குறியீட்டை வழங்குமாறு கேட்கும் பதிவு செய்யப்பட்ட செய்தியை (பெரும்பாலான சமயங்களில் உங்கள் உள்ளூர் மொழியில்) நீங்கள் கேட்பீர்கள். உங்கள் பிரச்சனையை விவரிக்கும் குரல் செய்தியை நீங்கள் பதிவு செய்ய முடியும்.

எங்களுக்கு தெரிவியுங்கள் இணையச் சேவையைப் பயன்படுத்த நீங்கள் தேர்வுசெய்தால், 106502 என்ற Primark அணுகல் குறியீட்டை நீங்கள் வழங்க வேண்டும், பின்னர் உங்கள் பிரச்சனையை விவரிக்கும் செய்தியை எழுத உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். இணைய சேவையில் உள்ள உரை உங்கள் உள்ளூர் மொழியில் உள்ளது.

எங்களுக்கு தெரிவியுங்கள் ஸ்மார்ட்போன் செயலியைப் பயன்படுத்த நீங்கள் தேர்வுசெய்தால், QR குறியீட்டை ஸ்கேன் செய்து செயலியை இலவசமாகப் பதிவிறக்கலாம். நீங்கள் Primark அணுகல் குறியீட்டை வழங்க வேண்டும், அது 106502 ஆகும், மேலும் உங்கள் பிரச்சனையை விவரிக்கும் செய்தியை எழுத உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். செயலியில் உள்ள உரை உங்கள் உள்ளூர் மொழியில் உள்ளது.

எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி எண், இணைய முகவரி, அணுகல் குறியீடு மற்றும் QR குறியீடு ஆகியவற்றின் விவரங்கள் Primark தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் காட்டப்படும் சுவரொட்டிகளிலும் உங்களுக்குக் கிடைக்கும். எங்களுக்கு தெரிவியுங்கள் வழிமுறைகளை நீங்கள் எளிதாக அணுகவும் அவற்றைப் வசதியாக பயன்படுத்துவதை உறுதிசெய்வதே எங்களின் மிகுந்த அக்கறை. எங்கள் சப்ளையர்களின் தொழிற்சாலைகளின் வழக்கமான சமூக தணிக்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சுவரொட்டிகள் மற்றும் பிற தொடர்புடைய தகவல் பொருட்களை எளிதில் அணுகுவதையும் மற்றும் அவை இயங்கும் முறையைப் பற்றிய உங்கள் புரிதலையும் நாங்கள் மதிப்பீடு செய்வோம்.

Primark-க்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்ட பிரச்சனைகள் பற்றிய பதிவுகள் பொருந்தக்கூடிய சட்டங்களின்படி தக்கவைக்கப்படும். எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி இணைப்பு தொடர்பாக, உங்கள் குரல் செய்தி அல்லது ஆடியோ பதிவு பிரதி எடுக்கப்படுகிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள எங்களுக்கு தெரிவியுங்கள் செயல்முறைகளின்படி உங்கள் அறிக்கை கவனிக்கப்படும்.

## எங்களுக்கு தெரிவியுங்கள் அமைப்பைப் பயன்படுத்தி Primark-ஐத் தொடர்பு கொண்டால் அடுத்து என்ன நடக்கும்?

நீங்கள் ஒரு தனிப்பட்ட வழக்கு எண்ணைப் பெறுவீர்கள். நீங்கள் எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி இணைப்பு, இணையச் சேவை அல்லது ஸ்மார்ட்ஃபோன் செயலிக்குச் சென்று, இந்த எண்ணைப் பயன்படுத்தினால், உங்கள் புகாரின் ஒப்புதலையும் (7 நாட்களுக்குப் பிறகு), கூடுதலான தகவலுக்கான வேண்டுகோளையும் மற்றும் பதிவு செய்யப்பட்ட பிரச்சனைகளின் நிலை குறித்த புதுப்பிப்புகள் பற்றி நீங்கள் கேட்கலாம்/படிக்கலாம்.

உங்கள் புகார்களை ஏழு நாட்களுக்குள் ஒப்புக்கொள்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். அதன் பிறகு ஆரம்ப மதிப்பீட்டை மேற்கொள்வோம். இந்த மதிப்பீட்டின் ஒரு பகுதியாக, உங்கள் பிரச்சனையைப் பற்றிய கூடுதல் தகவலை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படலாம். சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பொறுத்து, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கால அளவுகள் தீர்மானிக்கப்படும்.

திட்டமிடப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைகள் மற்றும் அத்தகைய நடவடிக்கைகளுக்கான காரணங்கள் (இரகசியத்தன்மை தேவைகளுக்கு உட்பட்டு) உட்பட எந்தவொரு விசாரணையின் முடிவும் உங்களுக்குத் தெரிவிக்கப்படும். எங்களுக்குத் தெரிவிக்கப்படும் பிரச்சனைகள் குறித்து விசாரிப்பதற்குப் பொறுப்பான நபர்கள் சுயாதீனமாகவும் பாரபட்சமற்றவர்களாகவும் இருப்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.

எந்த நேரத்திலும் நீங்கள் பெறும் பதிலில் நீங்கள் மகிழ்ச்சியடையவில்லை என்றால், மேலே குறிப்பிட்டுள்ளபடி, இந்த எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கையின் விவரிக்கப்பட்டுள்ள மற்ற தொடர்புகளை நீங்கள் தொடர்பு கொள்ளலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இதுபோன்ற ஏதேனும் சிக்கல்கள் நியாயமாகவும் சரியானதாகவும் கையாளப்படுவதை உறுதிசெய்ய நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

## எங்களுக்கு தெரிவியுங்கள் முறையைப் பயன்படுத்தி Primark-க்குத் தொடர்புகொண்டால் நாங்கள் உங்களை எவ்வாறு பாதுகாப்போம்?

### பின்விளைவுகளிலிருந்து

பிரச்சனைகளை தெரிவிக்கும் யாரையும் பழிவாங்குவதை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம். பிரச்சனை குறித்து புகார் தெரிவிக்கும் எந்தவொரு நபரும் பாதகமான பின்விளைவுகள், பழிவாங்கல் அல்லது தீங்கு விளைவிப்பதில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும். புகார் தெரிவிப்பதன் விளைவாக உங்களுக்கோ அல்லது உங்கள் பணிக்கோ ஏதேனும் தீங்கு இருப்பதாக நீங்கள் உணர்ந்தால், உடனடியாக எங்களுக்குத் தெரிவியுங்கள் தொலைபேசி இணைப்பு, இணையச் சேவை அல்லது ஸ்மார்ட்போன் செயலியைப் பயன்படுத்தி அது குறித்து புகாரளிக்க வேண்டும்.

## உங்கள் அடையாளம் மற்றும் தனியுரிமை

நீங்கள் எங்களுடன் வெளிப்படையாகப் பேச முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். நீங்கள் முற்றிலும் பெயர் அறியப்படாதவராக இருக்க விரும்பினால், அது உங்களைப் பொறுத்தது, மேலும் எங்கள் தொலைபேசி இணைப்பு, இணைய சேவை அல்லது ஸ்மார்ட்போன் செயலியைப் பயன்படுத்தி உங்களது பிரச்சனை குறித்து எங்களுக்குத் தெரிவிக்கலாம். உங்களின் பிரச்சனைகளைத் தீர்க்க எங்களுக்கு உதவியாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கும் எந்த ஒரு தகவலையும் எங்களுடன் பகிர்ந்து கொள்ளவும். நீங்கள் எதையாவது மறந்துவிட்டீர்கள் என்றால் கவலைப்பட வேண்டாம், எங்களை மீண்டும் தொடர்புகொள்வதற்கான விருப்பத்தேர்வு உங்களுக்கு உள்ளது அல்லது உங்களின் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க நாங்கள் உங்களை நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறும் நீங்கள் வேண்டுகோள் செய்யலாம்.

உங்கள் அடையாளத்தை நீங்கள் வெளிப்படுத்தினால், உங்கள் அடையாளத்தை தனிப்பட்டதாகவும் ரகசியமாகவும் வைத்திருக்க அனைத்து முறையான நடவடிக்கைகளையும் எடுப்போம். குற்றச்சாட்டை விசாரிப்பதற்காகவோ அல்லது சட்டத்தின்படி தேவைப்படும் நபர்களுக்கு மட்டுமே உங்கள் பெயரைத் தெரியப்படுத்துவோம். எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கையின் கீழ் எழுப்பப்பட்ட எந்தவொரு பிரச்சனையின் ஒரு பகுதியாக உங்களையோ அல்லது மற்றொரு நபரையோ அடையாளம் காணும் எந்தவொரு தனிப்பட்ட தகவலும், இந்த எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காகவும் பின் இணைப்பு 2 இல் உள்ள தனியுரிமை அறிவிப்பின்படியும் மட்டுமே பயன்படுத்தப்படும்.

நீங்கள் பெயர் மறைவு நிலையை தேர்வு செய்திருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல், எங்கள் சப்ளை செயினில் உள்ள தொழிலாளர்கள் பற்றிய தகவல்களை, பிரச்சனைகளை குறிக்கும் எங்கள் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் நாங்கள் ஒருபோதும் சேர்க்க மாட்டோம், இது அவர்களை அடையாளம் காண வழிவகுக்கும்.

## மற்றவை

சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டால் தவிர, எங்களுக்கு தெரிவியுங்கள் என்னும் இந்தக் கொள்கை உங்கள் வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமையாது, மேலும் Primark உடனான அத்தகைய ஒப்பந்தத்திற்கான அடிப்படையையும் வழங்காது. எந்த நேரத்திலும் எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கையை திருத்துவதற்கான உரிமையை நாங்கள் கொண்டுள்ளோம்.

# பின் இணைப்பு 1

## உள்ளூர் தொழிலாளர்களுக்கான ஹெல்ப்லைன்கள்

| **பெயர்** | **நாடு** | **தொலைபேசி மற்றும்/அல்லது இணையதளம்** |
|---|---|---|
| ஆமதர் கோத்தா | பங்களாதேஷ் | 08006666666 |
| MUDEM தொழிலாளர் ஆதரவு மையம் | துருக்கி | https://iscidestekmerkezi.org |
| RMG நிலைத்தன்மை கவுன்சில் (RSC) | பங்களாதேஷ் | பாதுகாப்பு குறித்தப் புகார்கள்:<br>08801769969000<br>பொது விசாரணைகள்:<br>08801766695900<br>0880241081863-6 |
| உங்கள் குரல் | இந்தியா | 1-800-8333-112 |

| | | |
|---|---|---|
| UNGAL KURAL உங்கள் குரல் | | |

## பின் இணைப்பு 2

### எங்களுக்கு தெரிவியுங்கள் - உங்கள் தனியுரிமை

ஐரோப்பிய தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி இணைப்பு, இணையச் சேவை மற்றும் ஸ்மார்ட்போன் செயலி மூலம் நீங்கள் சமர்ப்பிக்கும் தனிநபர் சார்ந்த தகவல் கட்டுப்பாட்டிற்கு Primark பொறுப்பாளராவர்.

### உங்கள் தனிப்பட்ட தரவு

தகாத, முறையற்ற, நேர்மையற்ற, சட்டவிரோதமான அல்லது ஆபத்தான நடத்தை ("தகாத நடத்தை") போன்ற குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக மட்டுமே எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட தனிப்பட்ட தகவலை எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கையின் கீழும் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களுக்கும் இணங்கப் பயன்படுத்துகிறோம். தகாத நடத்தையைப் புகாரளிக்கும் போது, நாங்கள் சேகரிக்கும் தகவல் குறித்தும், மேலும் Primark இல் அந்தத் தகவல் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது மற்றும் பகிரப்படுகிறது என்பதைப் பற்றியும் இந்த அறிவிப்பு உங்களுக்குத் தெரிவிக்கிறது.

### எந்த தனிப்பட்ட தகவலை நாங்கள் செயலாக்குகிறோம்?

எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி இணைப்பு, இணையச் சேவை அல்லது ஸ்மார்ட்ஃபோன் செயலி வழியாக நீங்கள் ஒரு பிரச்சினையைப் புகாரளித்தால், உங்களைப் பற்றி அல்லது உங்கள் புகாரில் நீங்கள் அடையாளம் காணும் எவரையும் பற்றி உங்கள் புகாரில் நீங்கள் சேர்த்துள்ள தனிப்பட்ட விவரங்களை நாங்கள் சேகரிப்போம். உங்கள் பெயரை தெரிவிக்க வேண்டும் என்று நாங்கள் கோருவதில்லை. பெயர் குறிப்பிடாமல் தெரிவிக்கப்படும் பிரச்சனைகள் மிகவும் குறைவான செயல்திறன் கொண்டவை என்பதால், உங்களை அடையாளப்படுத்துமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம். கூடுதலாக, எங்களிடம் போதுமான தகவல்கள் இல்லையென்றால், ஒரு முழுமையான விசாரணையை மேற்கொள்வது சாத்தியமில்லாமல் போகலாம்.

சில நேரங்களில் "உணர்வு பூர்வமான தனிப்பட்ட தகவல்" என குறிப்பிடப்படும் சிறப்பு வகைகளில் தனிப்பட்ட தகவலை நீங்கள் சேர்க்கலாம். இனம் அல்லது இன தோற்றம், மத நம்பிக்கைகள், உடல் அல்லது மன ஆரோக்கியம், தொழிற்சங்க உறுப்பினர், பாலியல் நோக்குநிலை, பாலியல் வாழ்க்கை தொடர்பான தகவல்கள், பயோமெட்ரிக் தரவு, மரபணு தரவு, குற்றவியல் பதிவுகள் மற்றும் கிரிமினல் குற்றங்கள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் போன்ற தகவல்கள் இந்த சொல்லில் அடங்கும்.

நீங்கள் ஒரு புகாருக்கு உட்பட்டவராகவோ அல்லது அறிக்கையில் பெயரிடப்பட்டவராகவோ இருந்தால், விசாரணைக்கு பாதகமாக அல்லது சட்டத்தால் நாங்கள் தடைசெய்யப்பட்டால் தவிர, உடனடியாக உங்களுக்குத் தெரிவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

## இந்தத் தகவலை நாங்கள் எப்படிப் பயன்படுத்துகிறோம்?

எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி இணைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்படும் குரல் அறிக்கைகள் சுருக்கமாக பதிவு செய்யப்பட்டு, புகார் அளிக்கப்பட்ட மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டிலும் அறிக்கைகள் உருவாக்கப்படும். எங்களுக்கு தெரிவியுங்கள் இணையச் சேவை மற்றும் ஸ்மார்ட்போன் செயலி மூலம் பெறப்பட்ட அனைத்து புகார்கள் மற்றும் அறிக்கைகள், எந்த நாட்டைச் சேர்ந்ததாக இருந்தாலும், ஒரு வழக்கு மேலாண்மை அமைப்பில் சேமிக்கப்பட்டு Primark-க்கு அனுப்பப்படும்.

அறிக்கையை மதிப்பாய்வு செய்யும் நோக்கங்களுக்காகவும், பொருத்தமான இடங்களில், கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் நோக்கங்களுக்காகவும் எங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலை நாங்கள் பயன்படுத்துகிறோம். இந்த நோக்கங்களுடன் தொடர்புடைய எங்கள் நியாயமான நலன்களுக்காக இந்தத் தகவலை நாங்கள் பயன்படுத்துவது அவசியமானது, மேலும் சம்பந்தப்பட்ட தனிநபர்களைப் பாதுகாக்க பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கிறோம்.

உங்கள் அறிக்கையில் கிரிமினல் குற்றங்கள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பான தனிப்பட்ட தகவல் மற்றும்/அல்லது தனிப்பட்ட தகவலின் சிறப்பு வகைகள் இருந்தால், இந்தத் தகவலை நாங்கள் பயன்படுத்துவது எங்கள் நியாயமான நலன்களுக்காக (மேலே விவரிக்கப்பட்டபடி) அவசியமானது, மற்றும்:

- தனிப்பட்ட தகவலின் சிறப்பு வகைகளைப் பயன்படுத்துவதைப் பொறுத்தவரை, கணிசமான பொது நலன்களுக்கு இது அவசியம் மற்றும் / அல்லது சட்ட உரிமைகோரல்களை நிறுவுவதற்கு அல்லது பாதுகாப்பதற்கு அவசியம்; மற்றும்
- கிரிமினல் குற்றங்கள் அல்லது குற்றச்சாட்டுகள் தொடர்பான தகவல்களைப் பொறுத்தவரை, சட்டவிரோத செயல்களைக் கண்டறிவது அல்லது தடுப்பது அவசியம்.

## உங்கள் தகவலைப் பகிர்தல்

எங்களுக்கு தெரிவியுங்கள் அமைப்பின் மூலம் சமர்ப்பிக்கப்படும் நன்னெறி சிக்கல்கள் தொடர்பான எந்த புகாரையும் முதலில் Primark நன்னெறி வர்த்தகக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, எங்களுக்கு தெரிவியுங்கள் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி கையாளப்படும்.

பிற புகார்கள் பொதுவாக தகுந்த விசாரணைக்கு உதவுவதற்காக Primark-இல் உள்ள தொடர்புடைய குழுவுக்கு அனுப்பப்படும்.

மேலதிக பயிற்சி அல்லது பிற நடவடிக்கைகள் தேவைப்படும் ஏதேனும் போக்குகள் அல்லது கவலைக்குரிய பகுதிகளின் கண்ணோட்டத்தைப் பராமரிக்கும் பொருட்டு, அனைத்து புகார்களும் பெயர் மறைவுநிலையாக்கப்பட்டு Primark இடர் மற்றும் இணக்கத்தன்மை இயக்குநரின் காலாண்டு மதிப்பாய்வுக்காக Primark-ஆல் சுருக்க அறிக்கைகளாக தொகுக்கப்படும்.

## உங்கள் தகவலை நாங்கள் எவ்வளவு காலம் வைத்திருப்போம்?

அறிக்கை உருவாக்கப்பட்டவுடன் ஆரம்ப குரல் பதிவுகள் நீக்கப்படும். எங்களுக்கு தெரிவியுங்கள், இணைய சேவை மற்றும் ஸ்மார்ட்போன் செயலி மூலம் பெறப்பட்ட புகார்கள் மற்றும் புகார்களின் அறிக்கை புலனாய்வு செய்வதற்கு அவசியமான காலம் வரையில் எங்களுக்கு தெரிவியுங்கள் அமைப்பிற்குள் தக்க வைக்கப்படும், மேலும் ஒரு வழக்கு 'மூடப்பட்டவுடன்' கூடுதல் மூன்று ஆண்டுகளுக்கு (பொருந்தக்கூடிய சட்டங்களின் கீழ் நீண்ட காலம் தேவைப்பட்டால் தவிர) தக்கவைக்கப்படும். அடையாளம் காணும் அனைத்து தகவல்களும் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, புகாரின் வகை, அதன் இருப்பிடம் மற்றும் விசாரணையின் விளைவு ஆகியவற்றை விவரிக்கும் ஒரு புள்ளிவிவர பதிவு மட்டுமே உள் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக தக்கவைக்கப்படுகிறது.

## உங்கள் தகவல் எங்கே சேமிக்கப்பட்டு மாற்றப்படுகிறது?

எங்களுக்கு தெரிவியுங்கள் தொலைபேசி இணைப்பு, இணைய சேவை மற்றும் ஸ்மார்ட்போன் செயலி மூலம் சமர்ப்பிக்கப்பட்ட புகார்கள் ஐரோப்பாவின் நெதர்லாந்தில் அமைந்துள்ள எங்கள் சப்ளையரின் சேவையகங்களில் சேமிக்கப்படும். உங்கள் தகவல் இங்கிலாந்து மற்றும் அயர்லாந்தில் உள்ள Primark இடம் அனுப்பப்பட்டு, பின்னர் மிகவும் பொருத்தமான வணிகப் பிரிவுக்கு விசாரணைக்காக ஒதுக்கப்படும். இதன் பொருள் என்னவென்றால் உங்கள் தகவல் இங்கிலாந்து, அயர்லாந்து, நெதர்லாந்திற்கும், மற்றும் தொடர்புடைய விசாரணைக் குழு அமைந்துள்ள இடத்திற்கு மாற்றப்படும்.

## உங்களுடைய உரிமைகள்

உங்கள் தனிப்பட்ட தகவலின் நகலை உங்களுக்கு வழங்கும்படி எந்த நேரத்திலும் எங்களிடம் கேட்கலாம். உங்களைப் பற்றி நாங்கள் சேகரித்துள்ள தனிப்பட்ட தகவல் தவறானது அல்லது முழுமையற்றது என்று நீங்கள் நினைத்தால், அதைச் சரிசெய்ய அல்லது பூர்த்தி செய்யுமாறு எங்களைக் கேட்கலாம். சில சூழ்நிலைகளில், உங்கள் தகவலை நாங்கள் பயன்படுத்துவதை மறுக்கவும், உங்கள் தகவலை நாங்கள்

பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தவோ அல்லது அதை நீக்கும்படி எங்களைக் கேட்கவும் உங்களுக்கு உரிமை உள்ளது. இருப்பினும், இந்த உரிமைகளுக்கு சில விதிவிலக்குகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, உங்கள் தகவலை சட்டப்படி வைத்திருக்க வேண்டியிருந்தால் அல்லது சட்டப்பூர்வ உரிமைகோரலை நிறுவ அல்லது பாதுகாத்துக் கொள்ள அதைப் பயன்படுத்த வேண்டியிருந்தால், அதை எங்களால் நீக்க முடியாது.

உங்களின் தனிப்பட்ட தகவலை அணுக அல்லது உங்களின் உரிமைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்த விரும்பினால், முதலில் dataprotection@primark.ie இல் Primark தரவுப் பாதுகாப்புக் குழுவைத் தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் தகவல்களை நாங்கள் கையாளும் விதம் குறித்து உங்களுக்கு வேறு ஏதேனும் பிரச்சனைகள் இருந்தால், உங்கள் உள்ளூர் தரவுப் பாதுகாப்பு மேற்பார்வை அதிகாரியிடம் புகார் செய்வதற்கான உரிமை உங்களுக்கு உள்ளது.